முருகப்பெருமான் துணை

**மகான் தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.04.2023, திங்கட்கிழமை

1. யோக ஆனந்த ஞான வள்ளலே
   உண்மை பொருள் கண்ட அண்ணலே
   செகமெல்லாம் பெருமை அடைய
   சித்திகள் புரியும் குருவரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
   அறிவிக்க சுபகிருது சேல் திங்கள்
   வரங்களென இருபானேழ் திகதி சோமவாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 27 ம் நாள், 10.04.2023, திங்கட்கிழமை)
   வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை தொண்டரடிப்பொடியாழ்வாரும்
   அருளுவேன் உலகநலம் காண
   பேசிட தானதரும வழிதனை
   பேதமிலா மக்கள் கடைபிடிக்க
4. கடைபிடிக்க அன்னதான நெறி
   கருணையோடு வழங்கும் அரங்கனை
   தடையற மக்கள் தொடர்ந்துவர
   தானதருமங்கள் செய்துவர
5. வருகவே வினைகள் விலகும்
   வரமென ஞான சக்தி
   தருமபலம் வழியாகக் கண்டு
   தானவர்கள் நிலை உயரும்
6. உயரவே தடைகள் இல்லா
   உயர்வாழ்வாய் சகல வகையும்
   தயவான மாற்றமாகக் கூடி
   தக்கபடி எல்லா வரமும் கிட்டும்
7. கிட்டவே குருவரங்கன் திருவடி
   குறைபோக்கும் மலரடி
   தட்டாது தொடர்ந்து பணிந்து
   தரணியோர் தொண்டர்களாகிவிட

**8.** ஆகிவிட அளவிலா பாதுகாப்பு
அரிதும் எளிதாகி இனிதே
மகிழவே வளர்ச்சி கூடி
மக்களிடை பாதுகாப்பு குன்றா

**9.** குன்றா நிலைகள் பெருகி
குறையிலா தரும ஞான
நன்றான தலைமைகள் வந்து
நம்பிக்கை தரும் ஞான ஆட்சி

**10.** ஞான ஆட்சி அகிலம் பெறும்
ஞானிகள் வெளிப்படும்படி
தானபலம் அகிலம் அடைய
தானாக உலகமாற்றம் நிகழும்

**11.** நிகழவே ஞானகுரு அரங்கன்
நீதிநெறி வழிகாட்டலும் இனிதே
வகைபட வளர்ச்சி பூமியாக
வள்ளல் பூமியாக மலரச் செய்யும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—